RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING    மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-86 | 03 ஏப்ரல் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## எல்லை கட்டுப்பாடு கோட்டைத் தாண்டி பாகிஸ்தான் ராணுவம் ஊடுருவல்: இந்திய ராணுவம் பதிலடி

பூஞ்ச், ஏப்.3



இந்தியா பாகிஸ்தான் இடையேயான எல்லைக்கட்டுப்பாடு கோடு போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் ராணுவம் ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் ஊடுருவியதாக இந்திய ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.


இதுகுறித்து ராணுவ செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், "ஏப்ரல் 1ம் தேதி, பாகிஸ்தான் ராணுவம் எல்லைக்கட்டுப்பாடு கோட்டை மீறி இந்தியாவுக்குள் ஊடுருவியது. இதனால் கிருஷ்ணா காட் செக்டாரில் ஒரு கன்னி வெடி குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது, போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியது. இதற்கு நமது ராணுவம் முறையாக பதிலடி கொடுத்தது. தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

எல்லைக் கட்டுப்பாடு கோட்டில் அமைதியை பேணுவதற்கு 2021ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட டிஜிஎஸ்எம்ஒ புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கடைபிடிக்க வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது." என்று தெரிவித்தார்.

கடந்த 2021ம் ஆண்டு இந்தியா பாகிஸ்தான் உயர் அதிகாரிகள் சந்தித்து பேசிய போது, வன்முறைக்கு வழிவகுக்கும் கவலைகளுக்கு தீர்வு காண இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## விருதுநகரில் தீ விபத்து! 26 குடிசைகள் எரிந்து சேதம்

விருதுநகர், ஏப்.3



விருதுநகரில் நேற்று அதிகாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 26 குடிசைகள் எரிந்து முற்றிலும் சேதம் அடைந்தன.

விருதுநகரில் சொக்கநாத சுவாமி கோயில் அருகே உள்ள பெருமாள் கோயில் தெருவில் பால் பண்ணை பேட்டை உள்ளது. இங்கு 100க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. 400க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். மிக நெருக்கமாக வீடுகள் உள்ள இந்த பகுதியில் நேற்று அதிகாலை சுமார் 4 மணி அளவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. தீ வேகமாக அடுத்தடுத்த வீடுகளுக்கும் பரவியது. இதனால் பொதுமக்கள் அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர்.

குழந்தைகளையும் முதியோர்களை அழைத்துக் கொண்டு அனைவரும் பால்பண்ணை பேட்டையில் இருந்து வேகமாக வெளியேறினர். நான்கு வீடுகளில் இருந்த சிலிண்டர்கள் வெடித்துச் சிதறின. தீ விபத்து குறித்து தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு வீரர்கள் சுமார் 2 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். அதற்குள் 26 வீடுகள் முற்றிலுமாக தீயில் எரிந்து சேதமடைந்தன.

பால்பண்ணையில் இருந்த 10க்கும் மேற்பட்ட பசுக்கள் பத்திரமாக மீட்கப்பட்டன. பொதுமக்கள் விரைவாக அங்கிருந்து வெளியேறியதால் உயிரிழப்பு தடுக்கப்பட்டது. ஆனாலும் தீ விபத்தில் 26 வீடுகளிலும் இருந்த அனைத்துப் பொருட்களும் எரிந்து சேதமடைந்தன. சம்பவ இடத்தில் எஸ்.பி. கண்ணன் நேரில் விசாரணை நடத்தினார். பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு அருகில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கோட்டாட்சியர் சிவகுமார் தலைமையில் வருவாய்த்துறையினர் அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுத்துள்ளனர். மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து நடந்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் விபத்துக்கான காரணம் குறித்து விருதுநகர் பஜார் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தமிழகத்தில் ஏப்.5ம் தேதி வரை மிதமான மழை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஏப்.3



வளிமண்டலத்தில் சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளதால், தமிழகம், புதுச்சேரியில் சில இடங்களில் வரும் 5ம் தேதி வரை மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரைக் கண்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் கடந்த ஒரு வாரமாக வறண்ட வானிலை நிலவியது. இதனால், சில இடங்களில் வெப்பநிலை இயல்பைவிட 2 டிகிரி முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்தது. தற்போது, வளிமண்டலத்தில் சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது. அதாவது, தென் மேற்கு வங்கக் கடல் மற்றும் வட தமிழகப் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் (ஏப்.2) முதல் வரும் 5ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சில பகுதிகளில் கனமழைக்கும் வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக, வரும் 3ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, தேனி, திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், வரும் 4, 5ம் தேதிகளில் கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 15 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இந்த மழைப் பொழிவால் வெப்பநிலை படிப்படியாக குறைய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானாமதுரை அருகே பொதுப் பாதையை ஆக்கிரமித்து கழிப்பறை கட்ட முயற்சி!

மானாமதுரை ஏப்.3



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே சிப்காட் ராஜேந்திரன் நகர் பகுதியை சேர்ந்த வெள்ளைச்சாமி மனைவி பிச்சையம்மாள்(மாற்றுத்திறனாளி) இவர் ராஜேந்திரன் நகரில் முப்பது வருடங்களாக வீடு கட்டி வசித்து வருகிறார் அவரது வீட்டின் முன்பு 10அடி பொதுபாதை உள்ளது பிச்சையம்மாள் வீட்டில் அருகில் காட்டு ராஜா என்பவர் பொதுப்பாதையை ஆக்கிரமித்து கழிப்பறை கட்டியுள்ளார். மேலும் செப்டிக் டேங்க் கட்டி அப்பாதையை யாரும் பயன்படுத்தாத வகையில் இரவோடு இரவாக வானம் தோண்டி வேலை செய்து வருகிறார். பாதையை தடை செய்தால் நாங்கள் எப்படி சென்று வருவது என பிச்சையம்மாள் கேட்டதற்கு காட்டு ராஜா என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது நீ எங்கு வேண்டுமானாலும் கூறிக் கொள் என்று மிரட்டும் தோணியிலும் மிரட்டல் விடுத்துள்ளார். அப்பகுதியை வரைமுறை செய்திட பிச்சையம்மாள் மானாமதுரை தாலுகா அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார் ஆனால் இதனால் வரை அலுவலர்கள் யாரும் அதற்கான தீர்வு காணவில்லை என பிச்சையம்மாள் குற்றச்சாட்டு வைத்துள்ளார். பொதுப் பாதையை ஆக்கிரமித்து அபகரிக்கும் நபர்கள் மீது மாவட்டக் காவல்துறை ?மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா ? என்ற கேள்வி எழுந்துள்ளது.

## கச்சத்தீவை மீட்க மத்திய அரசை வலியுறுத்தி முதல்வர் கொண்டுவந்த தனி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்

சென்னை, ஏப்.3



கச்சத்தீவை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி முதல்வர் மு.க. ஸ்டாலின் கொண்டுவந்த தனித் தீர்மானம் விவாதத்துக்குப் பிறகு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. சபாநாயகர் அப்பாவு இதனை அறிவித்தார்.

கச்சத்தீவு மீட்பு தொடர்பான அரசினர் தனித் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தார். அப்போது அவர் ஆற்றிய உரையில், "தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதை கனத்த இதயத்தோடு இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். முற்றுப்புள்ளி வைக்க முடியாத தொடர் பேரழிவாக இது அமைந்திருக்கிறது. அங்கு எத்தனை அரசியல் நிலைமைகள் மாறினாலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது மட்டும் இன்னும் மாறாமல் இருக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய மீனவர்கள்தான் என்பதை ஒன்றிய அரசு அடிக்கடி மறந்துவிடுகிற காரணத்தால், நாம் மீண்டும் மீண்டும் அவர்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் என்று அழுத்தமாகச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் ஒரு மீனவர்கூட கைது செய்யப்படமாட்டார் என்று 2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நரேந்திர மோடி சொன்னார்கள். ஆனாலும், இந்தத் தாக்குதல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அண்டை நாடாக இருந்து கொண்டு இந்திய மீனவர்கள் மீது எந்தவிதமான இரக்கமும் இல்லாமல், நம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும்விதமாக, ஏன் அடியோடு பறிக்கும்விதமாக இலங்கைக் கடற்படையினரும், இலங்கை அரசும் நடந்து கொள்வது நமக்கெல்லாம் மிகுந்த கவலையளிக்கிறது; கண்டிக்கத்தக்கது. இதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு தடுத்து நிறுத்திட வேண்டும்.

எவ்வளவு காலத்துக்கு இதனைச் சகித்துக் கொண்டு இருக்க முடியும்? இதுபோன்ற சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத்தீவு மீட்பே மிகச் சரியான வழி என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாக மீண்டும் வலியுறுத்திட விரும்புகிறேன்.

கச்சத்தீவு விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும், கச்சத் தீவை மாநில அரசுதான் இலங்கைக்கு அளித்தது போன்று ஒரு தவறான தகவலைப் பரப்பி அரசியல் செய்வது அரசியல் கட்சிகளுக்கு வழக்கமாகி விட்டது. ஆனால், அரசியல் ஆதாயத்திற்காக கட்சிகள் செய்யும் அதே தவறை ஒன்றிய அரசு செய்வது வருந்தத்தக்கது; ஏற்கமுடியாதது.

கச்சத்தீவைப் பொறுத்த வரைக்கும், அந்தத் தீவைக் கொடுத்து, ஒப்பந்தம் போட்ட போதே முதல்வராக இருந்த கருணாநிதி கடுமையாக எதிர்த்தார். தமிழ்நாட்டு மக்கள் அதை விரும்ப மாட்டார்கள் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஆகவே, தமிழ்நாட்டு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் போது இலங்கைக் கடற்படையினரால் கடும் தாக்குதலுக்கு உள்ளாவது, படகுகள் பறிமுதல் செய்யப்படுவது, கடும் அபராதம் விதிக்கப்படுவது போன்றவற்றிலிருந்து தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாக்கவும், விரைவில் இலங்கை செல்லும் பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், கச்சத்தீவை மீட்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றம் விரும்புகிறது.

இதனை அடிப்படையாகக் கொண்ட தீர்மானத்தை இப்போது நான் முன்மொழிகிறேன்:

தீர்மானம்: "தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களைப் போக்கிடவும், கச்சத்தீவை மீண்டும் பெறுவதே நிரந்தரத் தீர்வாக அமையும்.

இதனைக் கருத்தில் கொண்டு, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அரசுமுறைப் பயணமாக இலங்கை செல்லும் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்கள் அந்நாட்டு அரசுடன் பேசி, இலங்கை சிறையில் வாடும் நம் நாட்டு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டு வரவேண்டுமென்று இப்பேரவை வலியுறுத்துகிறது." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாட்டைச் சார்ந்த இந்திய மீனவர்களின் நலன் கருதி, அனைத்துக் கட்சிகளும் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்" என தெரிவித்தார்.

முதல்வர் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது பேசிய பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன், "கச்சத்தீவு தாரைவார்க்கப்பட காங்கிரஸ் கட்சியும் திமுகவுமே காரணம். என்றாலும், தமிழக மீனவர்களின் நலன் கருதி இந்த தீர்மானத்தை பாஜக ஆதரிக்கிறது" என தெரிவித்தார்.

கச்சத்தீவு விவகாரத்தில் திமுக செய்த தவறுகள் குறித்துப் பேசிய சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, சபாநாயர் அப்பாவுவின் கோரிக்கையை அடுத்து தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தார். இதையடுத்து, இந்த தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டதாக சபாநாயர் அப்பாவு அறிவித்தார். தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நன்றி தெரிவித்தார்.

## இலவச, மானிய விலை மின்சார விநியோகம்; வரும் நிதியாண்டில் ரூ.16,274 கோடி வழங்க தமிழக அரசுக்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு

சென்னை, ஏப்.3



இலவச மற்றும் மானிய விலை மின்சாரத்துக்காக, வரும் நிதியாண்டில் ரூ.16,274 கோடி வழங்க தமிழக அரசுக்கு, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் வீடுகளுக்கு 100 யூனிட் வரை இலவசமாகவும், 500 யூனிட் வரை மானிய விலையிலும் மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. குடிசை வீடுகள், விவசாயத்துக்கு முற்றிலும் இலவசமாகவும், விசைத்தறி உள்ளிட்ட பிரிவுகளுக்கு மானிய விலையிலும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

இதற்காக, மின்வாரியத்துக்கு ஏற்படும் செலவை தமிழக அரசு மானியமாக வழங்குகிறது. ஆண்டுதோறும் எவ்வளவு மானியத் தொகை வழங்க வேண்டும் என்பதை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மதிப்பீடு செய்து அரசுக்கு உத்தரவிடுகிறது. அந்தத் தொகை மின்வாரியத்துக்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் வழங்கப்படுகிறது.

அதன்படி, வரும் 202526ம் ஆண்டுக்கு ரூ.16,274 கோடி வழங்க மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதில், வீடுகளுக்கான மானியம் ரூ.7,752 கோடி, விவசாயத்துக்கு ரூ.7,047 கோடி, குடிசை வீடுகளுக்கு ரூ.360 கோடி, வழிபாட்டு தலங்களுக்கு ரூ.20 கோடி, விசைத்தறிக்கு ரூ.560 கோடி, கைத்தறிகளுக்கு ரூ.15 கோடி, தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு ரூ.398 கோடி, அடுக்குமாடி குடியிருப்புகளின் பொது மின் இணைப்புகளுக்கு ரூ.49 கோடி என குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருச்சி நூலகத்துக்கு காமராஜர் பெயர்! சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப்.3



திருச்சியில் கட்டப்பட்டு வரும் நூலகத்துக்கு காமராஜர் பெயர் சூட்டப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று நெடுஞ்சாலை துறை மற்றும் பொதுப்பணி துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் திமுக உறுப்பினர் க.அன்பழகன், நூலகங்கள் பற்றி பேசியதற்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலளித்து கூறியதாவது:

திமுக ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கிற நூலகங்களுக்கு மாபெரும் தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கிறது என்ற கருத்தை வெளிப்படுத்தி காட்டியுள்ளார். குறிப்பாக, திருச்சியில் ரூ.290 கோடியில் என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட மாபெரும் நூலகத்துக்கு மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயர் சூட்டப்பட்டிருப்பதாக, பொதுப் பணித்துறை 4 ஆண்டு சாதனைகள் தொடர்பான புத்தகத்தில் நான் பார்த்தேன். கருணாநிதியால், கோட்டூர்புரத்தில் திறந்து வைக்கப்பட்ட நூலகத்துக்கு அண்ணா நூற்றாண்டு நூலகம் என்று பெயர் சூட்டப்பட்டது.

மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, ஒரே ஆண்டில் அதன் கட்டுமான பணிகள் முடிவுற்று, மாபெரும் சாதனை செய்யப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது என்பதை எல்லோரும் அறிவர். இதுவரை சுமார் 16 லட்சம் பொது மக்களும், மாணவர்களும் இந்த நூலகத்தால் பயனடைந்திருக்கிறார்கள். அண்மையில் கோவையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டபோது, கோவையில் ஒரு மாபெரும் நூலகம் அமைக்கப்படும் என அறிவித்தேன். கடந்த நவம்பர் மாதம் அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அதேபோல், திருச்சியில் அறிவிக்கப்பட்டிருக்கிற நூலகத்துக்கு கடந்த மாதத்தில் நான் அடிக்கல் நாட்டியிருக்கிறேன். இந்த பணிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

கோவையில் பெரியார், சென்னையில் அண்ணா, மதுரையில் கலைஞர் ஆகியோரின் பெயர்களை தாங்கி நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதனை தொடர்ந்து, திருச்சியில் அமையவிருக்கும் நூலகத்துக்கு காமராஜர் பெயரை சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகிறேன். எனவே, தமிழகத்தில் கிராமங்கள்தோறும் பள்ளிகளை தொடங்கி, மதிய உணவு அளித்து, லட்சக்கணக்கான குடும்பங்களின் கல்வி கண்களை திறந்து, தமிழகத்தின் கல்வி புரட்சிக்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் வித்திட்ட காமராஜர் பெயரை சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி, திருச்சியில் கட்டப்பட்டு வரும் நூலகத்துக்கு காமராஜர் பெயர் சூட்டுவதற்கான அரசாணையை பள்ளிக கல்வித்துறை அமைச்சர் வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



சென்னையில் இருந்து மண்டபம் வரும் சேது விரைவு வண்டி எண்(22661)முன் பகுதியில் பயணம் செய்து வந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த வாலிபர்கள் இருவரிடம் இருந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளாகிய கஞ்சா .19.700கி.கிராமை ராமேஸ்வரம் குற்றத்தடுப்பு சிறப்பு சார் ஆய்வாளர் மயில் முருகன் மற்றும் காவலர்கள்.60, 748 மற்றும் காரைக்குடி சர்க்கில் கிரைம் சிறப்பு சார்பு ஆய்வாளர்செந்தில்குமார் மற்றும் த.காவலர்கள் 178,439,1526 ஆகியோர் கஞ்சாவையும் கைப்பற்றி ராமநாதபுரம் போதை பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவினர் வசம் ஒப்படைத்தனர்..



திருப்பூர் மாவட்டம் பார்க் ரோடு ஸ்ரீ ராகவேந்திரா திருக்கோயில் அருகில் 1.7 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் புதிய அலுவலக கட்டிட கட்டும் பணியினை மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் அடிக்கல் நாட்டினார். உடன் திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி தலைமையில் மாநகராட்சி மைய அலுவலகம் மாமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற 2025-2026 வரவு செலவுத் திட்ட அறிக்கை கூட்டத்தில் திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் ஓராண்டுசாதனை விளக்க கால பேழையினை வெளியிட்டார் உடன் துணை மேயர் பாலசுப்ரமணியம், நிதி குழு தலைவர் கோமதி மற்றும் மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மானாமதுரை வெங்கடேஷா இன்டர்நேஷனல் பள்ளி ஆண்டு விழா




மானாமதுரை ஏப்.3

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை அருகே மேலக்கொன்னக்குளம் ரயில்வே ஸ்டேஷன் அருகில் இயங்கி வரும் ஸ்ரீ வெங்கடேஷா இன்டர்நேஷனல் பள்ளியின் ஆண்டு விழா பள்ளி தாளாளர் ராஜ்குமார் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் மானாமதுரை காவல் துணை கண்காணிப்பாளர் நிரேஷ் மற்றும் மதுரை விமான நிலைய மேலாளர் என். சுப்ரமணியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். மேலும் விழாவில் மானாமதுரை எம்எல்ஏ ஆ.தமிழரசி மற்றும் ஸ்ரீ வெங்கடேஷா கல்வி மற்றும் அறக்கட்டளை யின் நிறுவனர் பி. பாண்டியம்மாள் கணேசன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி கலந்து கொண்டனர்.மேலும் ஸ்ரீ வெங்கடேஷா இன்டர்நேஷனல் பள்ளி தாளாளர் ராஜ்குமார் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.






ஆண்டு விழாவில் மாணவ மாணவிகளுக்கான நடன, இசை மற்றும் கலைப் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழா இறுதியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளி மாணவ மாணவிகள்,பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வசந்த நகரில் உள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் (இந்தியன் ஆயில் பொன்னி பில்லிங் ஸ்டேஷன் ) மற்றும் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவ குழுவினர் நடத்திய இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நேற்று நடைபெற்றது. முகாமில் சர்க்கரை நோய் பரிசோதனை கண் பரிசோதனை இசிஜி பரிசோதனை மற்றும் ஆலோசனை ரத்த அழுத்தம் போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மருத்துவர் காளீஸ்வரி முகாமில் கலந்து கொண்டு உடல் பரிசோதனை செய்த நபர்களுக்கு ஆலோசனை வழங்கினார் .இம்முகாமி மானாமதுரை பொன்னி பில்லிங் ஸ்டேஷன் உரிமையாளர் அராபாத் , மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவ குழுவின் மெடிக்கல் கேம்ப் மேனஜர் ராஜ்குமார் , செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்

## சிவகங்கை மாவட்டம் காளையார் தாலுகா காய உடை கிராமத்தில் முறைகேடாக பட்டா வழங்குவதாக ஆட்சியர்- காவல் கண்காணிப்பாளரிடம் மனு

சிவகங்கை, ஏப்.3

சிவகங்கை மாவட்டம் காளையார் தாலுகா காய உடை கிராமத்தில் அரசு சொந்தமான காளியாக உள்ள இடங்கலை வட்டாட்சியர் தலைமையில் கிராம நிர்வாக அலுவலர் மேர் பார்வையில் பகுதியில் உள்ள அனைத்து நத்தம் புறம்போக்கு அனைத்தும் தகுதி இல்லாதவர்களுக்கும், ஏற்கனவே வீடுகள் வைத்து பல மனை இடங்கள் வைத்து பட்டா உள்ளவர்களுக்கும் பணம் பெற்றுக் கொண்டு முறைகேடாக பட்டா வழங்குவதாக மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளரிடம் அப்பகுதியில் வசிப்பவர் மனு கொடுத்து வருகிறார் இது குறித்து மாவட்ட நிர்வாகம் முறையான ஆய்வு செய்து இயல்பாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏழை எளியவர்களுக்கு மனை இடம் இல்லாத மக்களுக்கு மனை யிடம் வழங்கி பட்டா வழங்க ஆவணம் செய்யுமாறு சமூக ஆர்வலர்கள் கூறிவருகிறார்கள் அது மட்டுமல்லாது முதல்வர் அவர்கள் அனைவரும் வசிக்க வீடு இல்லாமல் இருக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் செயல்பட்டுவரும் சூழலில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பான முயற்சிகள் மற்றும் நல்ல திட்டங்கள் விரயமாகி விடக்கூடாது என்ற கூற்றுக்கு இணங்க மாவட்ட நிர்வாகம் பண பலத்தால் எந்த இடத்தை வேண்டுமானாலும் வளைத்து போட முடியும் என்ற எண்ணம் கொண்டவர்களை இரும்புகரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது..





## அவிநாசி, புதுப்பாளையம் ஊராட்சி பகுதிகளில் கலைஞரின் கனவு இல்லத்திட்ட வீடுகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு

திருப்பூர் ஏப்.3

திருப்பூர் மாவட்டத்தில் 3505 பயனாளிகளுக்கு ரூ.62.32 கோடி மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மற்றும் ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டப்பணிகளுக்கான ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் (01.04.2025) அன்று திருப்பூர் மாவட்டம், அவிநாசி ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி பகுதிகளில் கலைஞரின் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,



திருப்பூர் மாவட்டத்தில் 2024 25 ஆம் ஆண்டில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் அவிநாசி ஒன்றியத்தில் 56 பயனாளிகளுக்கு ரூ.1.96 கோடி மதிப்பீட்டிலும், தாராபுரம் ஒன்றியத்தில் 43 பயனாளிகளுக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும், குடிமங்கலம் ஒன்றியத்தில் 179 பயனாளிகளுக்கு ரூ.6.26 கோடி மதிப்பீட்டிலும், மடத்துக்குளம் ஒன்றியத்தில் 149 பயனாளிகளுக்கு ரூ.5.21 கோடி மதிப்பீட்டிலும், மூலனூர் ஒன்றியத்தில் 74 பயனாளிகளுக்கு ரூ.2.59 கோடி மதிப்பீட்டிலும், பல்லடம் ஒன்றியத்தில் 118 பயனாளிகளுக்கு ரூ.4.13 கோடி மதிப்பீட்டிலும், பொங்கலூர் ஒன்றியத்தில் 54 பயனாளிகளுக்கு ரூ.1.89 கோடி மதிப்பீட்டிலும், குண்டடம் ஒன்றியத்தில் 97 பயனாளிகளுக்கு ரூ.3.39 கோடி மதிப்பீட்டிலும், காங்கேயம் ஒன்றியத்தில் 123 பயனாளிகளுக்கு ரூ.4.30 கோடி மதிப்பீட்டிலும், திருப்பூர் ஒன்றியத்தில் 78 பயனாளிகளுக்கு ரூ.2.73 கோடி மதிப்பீட்டிலும், வெள்ளகோவில் ஒன்றியத்தில் 196 பயனாளிகளுக்கு ரூ.6.86 கோடி மதிப்பீட்டிலும், உடுமலைப்பேட்டை ஒன்றியத்தில் 151 பயனாளிகளுக்கு ரூ.5.28 கோடி மதிப்பீட்டிலும், ஊத்துக்குளி ஒன்றியத்தில் 93 பயனாளிகளுக்கு ரூ.3.25 கோடி மதிப்பீட்டிலும் ஆணைகள் வழங்கப்பட்டு தற்போது வரை 375 கலைஞரின் கனவு இல்லம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.1,036 கலைஞரின் கனவு இல்லம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டத்தின் கீழ் அவிநாசி ஒன்றியத்தில் 345 பயனாளிகளுக்கு ரூ.2.31 கோடி மதிப்பீட்டிலும், தாராபுரம் ஒன்றியத்தில் 96 பயனாளிகளுக்கு ரூ.54.67 இலட்சம் மதிப்பீட்டிலும், குடிமங்கலம் ஒன்றியத்தில் 91 பயனாளிகளுக்கு ரூ.65.35 இலட்சம் மதிப்பீட்டிலும், மடத்துக்குளம் ஒன்றியத்தில் 111 பயனாளிகளுக்கு ரூ.83.53 இலட்சம் மதிப்பீட்டிலும், மூலனூர் ஒன்றியத்தில் 149 பயனாளிகளுக்கு ரூ.72.38 இலட்சம் மதிப்பீட்டிலும், பல்லடம் ஒன்றியத்தில் 129 பயனாளிகளுக்கு ரூ.74.27 இலட்சம் மதிப்பீட்டிலும், பொங்கலூர் ஒன்றியத்தில் 309 பயனாளிகளுக்கு ரூ.1.70 கோடி மதிப்பீட்டிலும், குண்டடம் ஒன்றியத்தில் 99 பயனாளிகளுக்கு ரூ.53.24 இலட்சம் மதிப்பீட்டிலும்,

காங்கேயம் ஒன்றியத்தில் 41 பயனாளிகளுக்கு ரூ.29.82 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பூர் ஒன்றியத்தில் 155 பயனாளிகளுக்கு ரூ.1.18 கோடி மதிப்பீட்டிலும், வெள்ளகோவில் ஒன்றியத்தில் 112 பயனாளிகளுக்கு ரூ.96.03 இலட்சம் மதிப்பீட்டிலும், உடுமலைப்பேட்டை ஒன்றியத்தில் 280 பயனாளிகளுக்கு ரூ.1.70 கோடி மதிப்பீட்டிலும், ஊத்துக்குளி ஒன்றியத்தில் 177 பயனாளிகளுக்கு ரூ.87.53 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 1956 வீடுகள் பழுது பார்க்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 138 வீடுகள் பழுது பார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் 3,505 பயனாளிகளுக்கு ரூ.62.32 கோடி மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள், ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டப்பணிகளுக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம், மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் அவிநாசி ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி பகுதிகளில் கலைஞரின் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் அவிநாசி வட்டம், ராக்கியாபாளையத்தில் வீட்டுமனை பட்டா மற்றும் புதுப்பாளையம் ஊராட்சியில் வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாகவும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாநல்லூர் சந்தை திடலில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம், பெருமாநல்லூரில் முதல்வர் மருந்தகம் மற்றும் பெருமாநல்லூர் நியாய விலை கடையில் ஆய்வு மேற்கொண்டும், தொடர்ந்து, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி, காரிங்கராயன்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மதிய உணவு திட்டம் மற்றும் காரிங்கராயன்பாளையத்தில் இலவச வீட்டு மனை பட்டா வழங்குவது தொடர்பாகவும், குன்னத்தூர் பேரூராட்சி, செங்காளிபாளையத்தில் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவது தொடர்பாகவும், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், எடையபாளையம் ஊராட்சி, ஏ.தொட்டியபாளையத்தில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது, அவிநாசி வட்டாட்சியர் சந்திரசேகர், அவிநாசி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயகுமார், ரமேஷ், திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனார்கிளி, வேலுசாமி, ஊத்துக்குளி வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணன், உதவி பொறியாளர்கள் செந்தில் (ஊத்துக்குளி), குருபிரசாந்த் (அவிநாசி), மகேஷ்வரி (திருப்பூர்) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.







பெரியார் வகையை பாசன விவசாய சங்கம் சார்பாக எம்பிரான் படத்தை தடை செய்யவும் பட தயாரிப்பாளர் கோகுலம் சிட் பண்ட்ஸ் உரிமையாளர் கோபாலை கண்டித்தும் கம்பம் குமுளி தேசிய நெடுஞ்சாலையில் ஊர்வலமாக சென்று காந்தி சிலை அருகே அமைந்துள்ள கோகுலம் சிட்பண்ட்ஸ் முற்றுகையிட விவசாயிகள் சென்றனர்.

## முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன்பெற சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அழைப்பு



சிவகங்கை, ஏப்.3

சிவகங்கை மாவட்டம் முன்னாள் படைவீரர்கள்/ இராணுவப் பணியின்போது

உயிரிழந்த படைவீரர்களின் கைம்பெண்கள், வயது வரம்பின்றி முதல்வரின் காக்கும்கரங்கள் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்துபயன்பெறலாம் ஸ்ரீ மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல்.

முதலமைச்சர் கடந்த சுதந்திர தின உரையின்போது முன்னாள் படைவீரர் நலனுக்காக ‘முதல்வரின் காக்கும் கரங்கள்” என்ற புதிய திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும் எனவும், இத்திட்டத்தின் மூலம் தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில், 30 விழுக்காடு மூலதன மானியமும், 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும் என்றும், அதுமட்டுமன்றி திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி போன்ற தேவையான பயிற்சிகளும் அரசால் வழங்கப்படும் எனவும், இராணுவப் பணியின்போது உயிரிழந்த படைவீரர்களின் கைம்பெண்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

மேற்கண்டவாறு, இத்திட்டத்தில் விண்ணப்பிக்க முன்னாள் படைவீரர்களின் வயது வரம்பு 55 வரை என தெரிவிக்கப்பட்டியிருந்தது, தற்பொழுது முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தில் விண்ணப்பிக்க வயது வரம்பு இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் விதவையர்கள், சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி விண்ணப்பித்து பயன்பெறலாம் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத், தெரிவித்துள்ளார்.

## கன்னியாகுமரி போலீசார் சோதனையில் கஞ்சா பறிமுதல்! நான்கு பேர் கைது









கன்னியாகுமரி, ஏப்.3

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் ஸ்டாலின் ஐபிஎஸ் உத்தரவின் பேரில் துணை காவல் கண்காணிப்பாளர் லலித் குமார் தலைமையில் குமரி மாவட்டத்தில் போதை பொருள் ஒழிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர் . இந்நிலையில் ராமன்புதூர் சந்திப்பில் ஒருவர் வீட்டில் கஞ்சா இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் தனிப்படை உதவி காவல் ஆய்வாளர் மகேஸ்வர ராஜ் தலைமையில் அப்பகுதியில் சென்று சோதனை செய்ததில்1.5 கிலோ கஞ்சா இருந்தது தெரியவந்தது அங்கிருந்த நான்கு பேரையும் கைது செய்து அவர்களிடம் இருந்து கஞ்சா மற்றும் 20 ஆயிரம் பறிமுதல் செய்தனர்



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அவிட்டம் திருநாள் மகாராஜா மைதானம் ( அனாதை மடம்) மற்றும் சரலூர் மீன்சந்தை, அபயகேந்திரா ஆகிய பகுதிகளில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா ஆய்வு மேற்கொண்டு அபயகேந்திரத்தில் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டியினை சீர்செய்யவும் அப்பகுதியினை சீர்செய்து திருமண மண்டபம் கட்டவும் சரலூர் பகுதி மீன்சந்தையில் கழிவுநீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதினை தடுத்திடவும் மீன்சந்தையினுள்ள பயன்பாடற்ற பொருட்கள் மற்றிடவும் மைதானத்திலுள் கட்டுமான கழிவு பொருட்களை அகற்றிடவும் மாநகராட்சி அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். உடன் மண்டலத்தலைவர் அகஸ்டினா கோகிலவாணி,மாமன்ற உறுப்பினர்கள் ரமேஷ் .ராணி,மாநகர நல அலுவலர் ஆல்பர் மதியரசு,உதவி செயற்பொறியாளர் ரகு ராம்,மாநகர செயலாளர் ஆனந்த்,பகுதி செயலாளர் .ஜீவா,மாநகர பொருளாளர் சுதாகர்,செயற்குழு .சதாசிவம்,வட்ட செயலாளர் சுரேஷ் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிங்கம்புணரி வட்டம் பாலாற்றில் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ள

## நீர்நிலை சீரமைப்புப் பணியினை துவக்கி வைத்த மாவட்ட ஆட்சியர்



சிங்கம்புணரி ஏப்.3

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.வி.மங்கலம் குரூப், சிலநீர்பட்டி கிராமத்தின் அருகே செல்லும் பாலாற்றில் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ள நீர்நிலை சீரமைப்புப் பணியினை, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர்வள ஆதாரங்களை சீரமைத்து நிலத்தடி நீரை மேம்படுத்திடும் பொருட்டு, தமிழகம் முழுவதும் நீர்நிலைகளை பாதுகாத்திட துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், சிவகங்கை மாவட்டத்தில் மழைக்காலங்களில் பெறப்படும் தண்ணீரை வீணாக்காமல் சேமிப்பதற்கு ஏதுவாக வரத்துவாய்கால், கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகளை புனரமைத்தல், பலப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைந்திருக்கும் செடிகளை அகற்றுதல், நீர்நிலைகளில் உள்ள சீமைக்கருவேல் மரங்களை அகற்றுதல் போன்ற பல்வேறுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதிக நீர்நிலை உள்ள பகுதியாகவும் சிவகங்கை மாவட்டத்தில், 5,000க்கும் மேற்பட்ட கண்மாய்களும் உள்ளன. விவசாய பெருங்குடி மக்களுக்கு பயனுள்ள வகையிலும், எதிர்கால சந்ததியினர்களின் நலன் காக்கின்ற வகையிலும் நீர்நிலைகளை பாதுகாப்பது அவசியமானதாகும்.

இப்பணியில், அரசுடன் இணைந்து நீர்நிலைகளை பாதுகாத்திட தனியார் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் தங்களது பங்களிப்பை அளித்திட முன்வந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், தங்களது நிறுவனத்தின் பெருநிறுவன சமூகப்பொறுப்பு நிதியின் (Corporate Social Responsblity Fund(CSRFund)) பங்களிப்புடன் நீர்நிலைகளை சீரமைக்கும் சிறப்பான பணியினை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஆண்டில் சருகணி ஆற்றுப் பகுதியில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள, சேது பாஸ்கர வேளாண்மை கல்லூரி நிர்வாகம் முன்வந்து, அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு முன்னதாக, ஜெயகாந்தன்,

மாவட்ட ஆட்சியராக பணிபுரிந்த காலத்தில், அச்சமயம் நான் தேவகோட்டை சார் ஆட்சியராக பணிபுரிந்த போது, மணிமுத்தாறு சீரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடதக்கதாகும்.

அதேபோன்று, தற்சமயம் மாவட்டத்திலுள்ள சிற்றாறு சீரமைக்கப்படவேண்டிய நீர்நிலைகள் ஆகியவைகளில், மாவட்ட நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுடன் தனியார் பங்களிப்பையும் ஒன்றினைத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

அதில், பாலாற்று பகுதியில் 25,750 கிலோ மீட்டர் தூரத்திற்கும், உப்பாறு பகுதியில் 2,500 கிலோ மீட்டர் தூரத்திற்கும், மொத்தம் ரூ.33,39,375 மதிப்பீட்டில் நீர்நிலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு செய்யப்பட்டு, அதன் தொடக்கமாக, சிங்கம்புணரி வட்டம், எஸ்.வி.மங்கலம் குரூப், சிலநீர்பட்டி கிராமத்தின் அருகே செல்லும் பாலாற்று பகுதியில், கருப்பையா ராமாயி அறக்கட்டளை சார்பில், நிர்வாக அறங்காவலர் கருப்பையா செட்டியார் ரூ.05.00 இலட்சம் நன்கொடையாக வழங்கி, நீர்நிலைகளை பாதுகாப்பதற்கு முன்வந்துள்ளனர்.

இதற்கு உறுதுணையாக இருந்த கருப்பையா ராமாயி அறக்கட்டளை அறங்காவலர் மணிகண்டன் இந்நிகழ்ச்சியில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று, சொக்கனேந்தல் பகுதியைச் சார்ந்த Tes-solve தொழில் நிறுவன தலைவர் ரவி வீரப்பன் ஆகியோர் கானாடுகாத்தான் பகுதியை சார்ந்த Laxmi Ceramics நிர்வாக இயக்குநர் முத்துராமன் அவர்களும் இப்பணியில் தங்களது பங்களிப்பை அளிப்பதற்கும் முன்வந்துள்ளனர்.

இப்பணிக்கென வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளனர். சீரமைப்பு பகுதிகளில் நில அளவீடு பணி மேற்கொள்ளப்பட்டு முறையாக ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டு, நீர்நிலை கரையோரங்களில் ழிசிசி மற்றும் ழிஷிஷி மாணாக்கர்களை கொண்டு மரக்கன்றுகள் நடும்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது. இதேபோன்று, தனியார் பங்களிப்புடன் விருச்சூழியாறு பகுதியிலும், 48 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் நீர்நிலை சீரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து வகையான நீர்நிலைகளின் தகவல்கள் தொடர்பான விவரங்கள் www.sivagangapunalvalam.in என்ற இணையதளத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் வாயிலாக பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் தாங்கள் விரும்பும் நீர்நிலைகள் பற்றிய முழுமையான தகவல்களை அறிந்து கொண்டு, தங்களின் அலைபேசி மற்றும் இமெயில் முகவரியுடன் தங்களது பெயர்களை பதிவு செய்து நீர்நிலைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் தங்களது பங்களிப்பினை ஏற்படுத்தி, மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சிவகங்கை மாவட்ட நிலையான இயற்கை வள மேலாண்மை சங்கம் என்ற பெயரில் பராமரிக்கப்பட்டு வரும்,

இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கணக்கு எண். 008401000069803 மூலமாகவோ அல்லது கீழ் குறிப்பிட்டுள்ள னி.ஸி சிஷீபீமீ மூலமாகவோ தங்களது நன்கொடை தொகையினையும் வழங்கிடலாம்.

நீர்நிலைகளை மீட்டெடுத்து, நீர்நிலைகளை பாதுகாக்கும் அடிப்படையில், மாவட்ட நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு, பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் ஆகியோர் உறுதுணையாக இருந்து, சிவகங்கை மாவட்டத்தினை வளமான மாவட்டமாக உருவெடுப்பதற்கு அனைவரின் பங்களிப்பு இருந்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் பாஸ்கரன், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சீனிவாசன், கருப்பையா ராமாயி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் கருப்பையா செட்டியார், அறங்காவலர் மணிகண்டன், நீர் நிலம் பாதுகாப்பு இயக்க நிர்வாகி கிருஷ்ணன், வட்டாட்சியர்கள் தங்கமணி (பேரிடர் மேலாண்மை), பரிமளம் (சிங்கம்புணரி), வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜசேகர் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் 13 நாட்கள் சிறப்பு பயிற்சி எதிரொலி



தாம்பரம் ஏப்.3

செங்கல்பட்டு மாவட்டம் தேசிய அளவிலான சப் ஜூனியர் பெண்கள் கபடி போட்டியில் தமிழக அணியினர் வெண்கல பதக்கம் வென்று அசத்தல்

பீகார் மாநிலத்தில் தேசிய அளவிலான சப் ஜூனியர் பெண்கள் கபடி போட்டி கடந்த மார்ச் 26ம் தேதி முதல் 30ம் தேதி வரை நடைப்பெற்றது. இதில் 28 மாநிலத்தை சேர்ந்த அணிகள் கலந்து கொண்டது. தமிழகத்தை சேர்ந்த பெண்கள் அணியும் பங்கேற்றன. இதில் தமிழகத்தை சேர்ந்த பெண்கள் கபடி அணியினருக்கு செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் 13 நாட்கள் சிறப்பு பயிற்சி ஒ.எம். ஆர்.சாலையில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் வழங்கப்பட்டது. சிறப்பாக பயிற்சியின் காரணமாக தமிழக கபடி வீராங்கனைகள் தேசிய அளவிலான போட்டியில் தங்கள் திறமைகளை வெளிப்படித்தி தமிழ்நாட்டிற்காக சிறப்பாக விளையாடி வெண்கல பதக்கம் வென்றனர்.

பதக்கம் வென்று சென்னை திரும்பிய தமிழக பெண் கபடி வீரர்களுக்கு சென்னை விமான நிலையத்தில்

தமிழ்நாடு அமைச்சூர் கபடி கழகம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

வெற்றி பெற்று சென்னை திரும்பிய வீராங்கணைகளுக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மற்றும் செங்கல்பட்டு மாவட்ட கபடி கழக செயலாளர் மு.வேல்முருகன், செங்கல்பட்டு மாவட்ட கபடி கழக தலைவர் சிவமணி ஆகியோர் மாலை மற்றும் சால்வை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர்.

தேசிய அளவிலான கபடி போட்டியில் பங்கேற்ற உள்ள தமிழக பெண்கள் கபடி அணியினருக்கு செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகத்தின் மாவட்ட செயலாளர் மு.வேல்முருகன், தலைவர் சிவமணி ஆகியோர் சிறப்பு பயிற்சி அளிக்க முடிவு செய்தனர். அதன் மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் சென்னை ஒ.எம். ஆர்.சாலையில் உள்ள செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் 13 நாட்கள் பெண்கள் கபடி அணியினருக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது. 13 நாட்கள் சிறப்பு பயிற்சியில் கலந்து கொண்ட வீராங்கணைகள் தேசிய அளவிலான போட்டியில் கலந்து சிறப்பாக முடிந்தது. கொண்டதால் விளையாட அதன் காரணமாக பீகாரில் நடந்த போட்டியில் தங்களது சிறப்பாக திறமையை வெளிப்படுத்தி பதக்கம் வெல்ல முடிந்ததாக தமிழக அணியிம் கேப்டன் காவ்யா தெரிவித்துள்ளார். மேலும் போட்டியில் வெற்றி பெற்று சென்னை திரும்ப தாம்பரம் சட்டமன்ற எஸ்.ஆர். ராஜா உறுப்பினர் தனது சொந்த நிதியில் இருந்து அனைத்து வீரர்களுக்கு விமான டிக்கெட் எடுத்து கொடுத்தகாவும் தமிழக அணியின் கேப்டன் காவ்யா கொண்டார்.

# தேனியில் நடைபெற்று வந்த புத்தகத் திருவிழா நிறைவு



தேனி,ஏப்.3

தேனி மாவட்டம், பழனி செட்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம் இணைந்து நடத்திய 3ஆவது புத்தகத் திருவிழா கடந்த 23.03.2025 ஆம் தேதி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால், மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டு, 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இப்புத்தகத் திருவிழாவில் 10 நாட்களும் தினந்தோறும் பள்ளி, கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், உள்ளூர் கவிஞர்கள், எழுத்தாளர்களின் இலக்கிய அரங்கம், முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகள், பல்சுவை நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புற கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இப்புத்தகத் திருவிழாவை பார்வையிட வருகை தந்த பொதுமக்கள் மற்றும் மாணவ,மாணவியர்கள் வசதிக்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.கடந்த 10 நாட்கள் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் ரூ.32.5 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், புத்தகத் திருவிழாவில் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற உள்ளூர் கவிஞர்கள், எழுத்தாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் கிராமிய கலைஞர்களுக்கு நினைவுப்பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



அல் அமீன் மேல்நிலைப் பள்ளியில் 25 ஆண்டுகளாக கணித ஆசிரியராக சிறந்த முறையில் பணியாற்றிய ஃ. அபுதாகிர் கணித பட்டதாரி ஆசிரியர் அவர்கள் இன்று பணி நிறைவு பெறுவதை முன்னிட்டு தலைமை ஆசிரியர் ஷி.ஷேக் நபி மற்றும் உதவி தலைமை ஆசிரியர்கள்,ஆசிரிய பெருமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் அலுவலர்கள், தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



மதுரை மாவட்டம் பாலமேட்டில் வடக்கு தெரு செல்லத்தம்மன் கோவில் பங்குனி மாத உற்சவத்தையொட்டி கனி மாற்றும் விழா நடந்தது. பல நூறு ஆண்டுகளாக பாரம்பரியமாக நடந்து வரும் இந்த விழாவில், மேளதாளம் முழங்க, வாண வேடிக்கையுடன், ஏராளமான பெண்கள், வாழைப்பழம், தேங்காய், சந்தனம், மஞ்சள் குங்குமம், பூமாலை, உள்ளிட்ட பூஜை பொருட்களை தாம்பாளதட்டில் வைத்து ஊர்வலமாக வந்து கோவிலுக்கு வந்தனர். அங்கு செல்லத்தம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை பொது மகாசபை கமிட்டியினர் செய்திருந்தனர்.

# வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையை மீண்டும் நிறுவக்கோரி பாஜக மேற்கு மாவட்டம் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு



மதுரை: ஏப்.3

மதுரை பாஜக மேற்கு மாவட்ட தலைவர் சிவலிங்கம், விஜய நகர பேரரசு நாயக்கர் வரலாற்று மீட்பு குழு மற்றும் நாயக்கர் வம்சம் மாநிலத் துணைத் தலைவர் பாஸ்கரன் நாயுடு, மதுரை பெரியார் நிலையம் பகுதியில் உள்ள கட்டபொம்மன் சிலை பராமரிப்பு நிர்வாகிகள் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சியர் மனு அளித்தனர். அம்மனுவில் மதுரை திருமங்கலம் கப்பலூரில் நெடுஞ்சாலை பணியின் போது அகற்றப்பட்ட சுதந்திர போராட்ட மாவீரர் மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையை அகற்றிய இடத்தில் மீண்டும் அதே சிலையை நிறுவக்கோரி கடந்த 20 ஆண்டு காலமாக பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்ற நிலையில் இன்றுவரை எந்த தீர்வும் எட்டப்படவில்லை, இனியும் காலம் தாழ்த்தாமல் தேசத்தின் சுதந்திரப் போராட்ட மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் உயிர் தியாகத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் அவரது சிலையை அகற்றிய இடத்தில் மீண்டும் அதே சிலையை நிறுவ ஆவன செய்யுமாறு கோரிக்கை வைத்தனர். இந்நிகழ்வில் மதுரை பாஜக மேற்கு மாவட்ட மண்டல, மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# லாரி ஓட்டுநர்களை அரிவாளால் வெட்டி வழிப்பறி: கடலூரில் கொள்ளையன் என்கவுன்டர்



கடலூர் ஏப்03

கடலூரில் லாரி ஓட்டுநர்களிடம் வழிப்பறியில் ஈடுபட்ட சம்பவத்தில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் விஜய் என்பவரை போலீசார் என்கவுன்ட்டர் செய்தனர்.

கடலூர் மாவட்டம், விழுப்புரம் நாகப்பட்டினம் நான்கு வழிச்சாலையில் இன்று அதிகாலையில் மூன்று லாரி ஓட்டுநர்களை அரிவாளால் வெட்டி அவர்களிடமிருந்து பணம் மற்றும் செல்போனை வழிப்பறி செய்ததாக புகார் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் தொடர்புடைய விஜய் என்ற நபர் எம். புதூர் பகுதியில் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்தனர். அப்போது, விஜய்யை பிடிக்க முயன்றதில், அவர் போலீசாரை அரிவாளால் தாக்கியதாக தெரிகிறது.

இதனால், விஜய் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் விஜய் உயிரிழந்தார். புதுச்சேரியைச் சேர்ந்த விஜய் மீது விழுப்புரம் மற்றும் கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 30க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# பசுமைக்குடில் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்



திண்டுக்கல், ஏப்.3

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அம்பாத்துரை கிராமம் மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த, இறுதி ஆண்டு பயிலும் மாணவர் க.செ.அபிஷேக், கிராமப்புற விவசாயப்பணி அனுபவ (RAWE) திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு “பசுமைக்குடில் தொழில்நுட்பம்” குறித்த பயிற்சி முகாம் நடத்தினார். இந்த முகாமில் சுமார் 15 விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்த பயிற்சி முகாமில், பசுமைக்குடில்களின் முக்கியத்துவம் மற்றும் அதனால் விவசாயிகளுக்கு கிடைக்கும் பல்வேறு நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், பசுமைக்குடில் தொழில்நுட்பம் குறித்து தங்களுக்கு இருந்த சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றனர். இந்த பயிற்சி முகாம் தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயத்தில் முன்னேற்றம் காண ஊக்கமளிப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். மேலும், வேளாண்மைத் துறையில் உள்ள புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்வதும், அதனை நடைமுறைப்படுத்துவதும் மிகவும் முக்கியம், ஆதலால் விவசாயிகள் தங்கள் உற்பத்தியையும் தரத்தையும் அதிகரிக்கலாம் என்று அவர் கூறினார்.



திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் பங்குனி உத்திர ஏப்.5 முதல் 14ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளனர். திருவிழாவை சிறப்பாக கொண்டாட முன்னேற்பாட்டு பணிகள் குறித்து, அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தலைமையில் நடைபெற்றது. அருகில் அனைத்துத் துறை அலுவலர்கள் உள்ளனர். கூட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள், அடிப்படை வசதிகள், கண்காணிப்பு வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் சு.ராமமூர்த்தி முத்தமிழறிஞர் கலைஞர் மத்திய பேருந்து நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் சுகாதார அலுவலர் ராமகிருஷ்ணன் உதவி பொறியாளர் ஆறுமுகம் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி மாநகர மேயர் ந.தினேஷ்குமார் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் சு.இராம மூர்த்தி தலைமையில் மாநகராட்சி மைய அலுவலகம் எதிரில் கோடை வெயிலை முன்னிட்டு மாநகராட்சி சார்பில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் நீர் மோர் வழங்கினர்.உடன் துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் தலைமை பொறியாளர் செல்வநாயகம் உதவி ஆணையாளர் ஆர்.வினோத் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் 2024-25ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு பயின்று வரும் மாணாக்கர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது.உடன் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் புஷ்பாதேவி, உயர் கல்வி வழிகாட்டி கருத்துரையாளர்கள் ஃபெலிக்ஸ்,சிரிஜித் சுந்தரம் ஆகியோர் உள்ளனர்.

# திண்டுக்கல் மாவட்ட முஸ்லீம், கிருத்துவ மகளிர் குழுக்களுக்கு அரசின் இணை மானியத்தொகையை பயனாளிகளுக்கு வழங்கிய ஆட்சியர்

திண்டுக்கல், ஏப்.3

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திண்டுக்கல் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்களுக்கு 20232024 ஆம் ஆண்டிற்கான அரசின் இணை மானியத்தொகை ரூ.40.00 இலட்சம் உதவித்தொகையை 245 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், வழங்கினார்.



முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவமகளிர் உதவும் சங்கங்களின் மூலம் திரட்டப்படும் நன்கொடைக்கு இணையாக அரசால் அதிகபட்சம் ரூ.20.00 இலட்சம் ஆண்டு தோறும் இணை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

2023–2024ஆம் ஆண்டிற்கான இணை மானியத்தொகை ரூ.40.00 இலட்சத்தினை ஆதரவற்ற ஏழை, உடல் நலன் குன்றிய பெண்களுக்கு உதவித்தொகை மற்றும் சிறுதொழில் தொடங்குவதற்கு உதவித்தொகை போன்றவை வழங்கப்படுகிறது.

அரசால் இணைமானியத் தொகையினை பயனாளிகளுக்கு வழங்க செயற்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட 134 பயனாளிகளுக்கு ரூ.20.00 இலட்சமும், கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட 111 பயனாளிகளுக்கு ரூ.20.00 இலட்சம் என மொத்தம் ரூ.40.00 இலட்சம் 245 பயனாளிகளுக்கு உதவித்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் .சதீஸ்பாபு, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் .சுதாகர், கிறித்துவ மகளிர் உதவும் சங்க கௌரவ செயலாளர் .ஆல்பர்ட் பெர்னான்டோ மற்றும் முஸ்லீம் மகளிர் உதவும் சங்க கௌரவ செயலாளர் மரு.பீர்முகமது மற்றும் சங்க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161